SC.No. 138/18
PW – 6
22.07.2025.
பெயர் :  சாகுல் ஹமீது
த/பெ. :  ஜமால் முகமது

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு  விசாரணை</u>**

கண்ணகி தெருவிற்கும் பள்ளிவாசல் தெருவிற்கும் இடையே சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் வாட்டர் பாட்டில் வியாபாரம் செய்கிறேன். நான் வாட்டர் பாட்டில்களை சில்லரைக்கு விற்பனை செய்யவில்லை. ஏஜென்ட்டுகள் மூலமாக தான் விற்று வருகிறேன். எனக்கு அடிக்கடி காவல் நிலையம் சென்று வரும் பழக்கம் இல்லை. நான் அடிக்கடி காவல் நிலையம் சென்று வருவது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. ஆலங்குடியை சேர்ந்த பழனி என்பவர் எனக்கு நெருங்கிய பழக்கம் என்று சொன்னால் சரிதான். நான் போலிசாரிடம் மூன்று கையெழுத்துகள் போட்டுக் கொடுத்தேன். சந்து பாதை சம்மந்தமாக எனது வீட்டிற்கு அருகே கோட்டாட்சியர், வட்டாட்சியர் ஆகியோர் வந்து பாதையை அடைத்தது சம்மந்தமாக விசாரிப்பதற்காக வந்தார்கள். எனது வீட்டிற்கு செல்வதற்கு தனியாக பாதை உள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரிகளை கைது செய்ததற்காகவும், சம்பவ இடத்தில் புலன்விசாரணை அதிகாரி பார்வையிட்டதற்காகவும் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். போலிசாரில் யார் அந்த சமயத்தில் என்னை அழைத்தார்கள் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சமயத்தில எதிரிகளை கைது செய்ததாக எனக்கு தகவல் சொன்ன நண்பர் பெயரும் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. காலை 10.00 மணியில் இருந்து 11.00 மணிக்குள் பாத்தம்பட்டி பஸ் நிறுத்தம் அருகில் நான் கையெழுத்து செய்தேன். மேற்கண்ட விவரங்களை நான் போலிஸ் விசாரணையின்போதும் கூறியுள்ளேன். நான் சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் சொன்ன இடத்தில் போலிசாரிடம் கையெழுத்து செய்து கொடுக்கவில்லை என்று சொன்னாலும் எதிரிகளை நான் சொன்னதுபோல் கைது செய்யவில்லை என்று சொன்னாலும் எதிரிகள் என் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் அவர்களிடமிருந்து சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. போலிசாரிடம் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் பாதை சம்மந்தமாக சிதம்பரம் வாத்தியாருடன் சேர்ந்து புகார்தாரருக்கு ஆதரவாக செயல்பட்டதால் புகார்தாரருக்கு ஆதரவாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/–சாகுல் ஹமீது

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.